# தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம்

## இலங்கை



தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்தினைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவைக் குழு

2023 செப்ரெம்பர்

# முகவுரை

இலங்கையின் கல்வித் துறையானது, **2020** ஆம் ஆண்டின் கோவிட் தொற்றுநோய் மற்றும் **2021** மார்ச் மாதத்தில் ஏற்பட்ட கடன் நிலுவையால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார உறுதிப்பாட்டினையும், அபிவிருத்தியையும் அடைவதற்கு இத் துறையில் சீர்திருத்தங்களின் அவசரத் தேவையை இனங்கண்டு, அரசாங்கம், அடுத்த 25 ஆண்டுகளுக்கு தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்தினை (NEPF) வகுத்தமைத்து, நடைமுறைப்படுத்துவதற்காக சனாதிபதி தலைமையில், பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் உள்ளடங்கலான பத்து உறுப்பினர்களைக் கொண்ட உப அமைச்சரவைக் குழுவொன்றினை அமைத்திருந்தது. இந்த முன்மொழிவுக்கு 2023 ஏப்பிரல் 24 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரமளித்திருந்ததுடன், அமைச்சரவைக் குழுவுக்கு உதவுவதற்காக 25 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர்கள் மற்றும் அலுவலர்கள் குழுவொன்றினையும் நியமித்திருந்தது.

நிபுணர்கள் மற்றும் அலுவலர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைவு தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் (2023-2033), நாட்டில் கல்வித் துறையை மாற்றுவதற்கான விரிவான, தொலை நோக்குசார் வழிகாட்டலை முன்மொழிகின்றது. இந்த உருவரைச்சட்டகம், கல்வியில் தரத்தினையும், சமத்துவத்தையும் மற்றும் மேன்மையையும் அடைவதற்கான பிரதான குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் செயல்களை கோடிட்டுக்காட்டுகின்றது. தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்தினை (NEPF), தேசிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் கல்வி பற்றிய உலகளாவிய ஈடுபாடுகளுடன் குறித்த பூகோள இணைந்து செல்கின்றது.

இந்த வரைவு தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் **"2048** ஆம் ஆண்டில் முழுமையாக அபிவிருத்தியடைந்த இலங்கை" என்ற தொலைநோக்கிற்கிணங்க, கல்வித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கொள்கைக் கோட்பாடுகளை கொண்டுள்ளது. இருப்பினும், விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் கூடிய டிஜிட்டல்மயமாக்கல் செயல்முறைகள் மற்றும் தொழில் சந்தையில் விரைவான மாற்றங்கள் காரணமாக, நீண்டகால கொள்கை எதிர்வுகூறல்களை மேற்கொள்வதுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது. எனவே, எதிர்காலத்தில் சாத்தியமான மீளாய்வுக்கு அனுமதித்து, இந்த தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்திற்கான கால வரையறை அடுத்த **10** ஆண்டு காலத்திற்கு **(2023-2033)** வரையறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலங்களில் கல்வித் துறையில் எதிர்பார்க்கப்படும் எந்தவொரு கொள்கைச் சீர்திருத்தமும் இந்த தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படவேண்டியது வேண்டியது கட்டாயமாகும்.

அமைச்சரவை **/** பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டவுடன், வரைவு தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் **(2023-2033)** , அந்த காலகட்டத்தில் கல்வி சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கான வழிகளையும், வழிகாட்டுநெறிகளையும் வழங்கும். அமுலாக்கல்

மூலோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், தேவையான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கும், அமுலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்கும், அக்கறைதாரர்களுடன் ஈடுபடுவதற்கும் குழுவிற்கு உதவுவதற்காக அமுலாக்கல் குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானிக்கலாம். அத்தகைய அமுலாக்கல் குழுவானது அமுலாக்கத்திற்குப் பொறுப்பான முகவர் நிறுவனங்களின் தலைவர்களையும், கல்விக் கொள்கை உருவாக்கம், அமுலாக்கம், மதிப்பீடு மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களை வரைவதில் நிபுணத்துவம் பெற்ற தனிநபர்களையும் கொண்டிருக்கும்.

## நிறைவேற்றுநர் சுருக்கவுரை

உள்ளடக்கம் மற்றும் பரீட்சை அடிப்படையிலான இலங்கையின் கல்வி முறைமை சிறிய சதவீத மாணவர்களை கல்விப் பாதைக்கு (இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்கழுவின்படி **2021** ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டோர் **8.9%)** தெரிவ்வுசெய்து, பெரும்பான்மையான மாணவர்கள் தமதுகற்றலுக்கு எதுவித நற்சான்றிதழுமின்றி விலகுகின்றனர். பாரம்பரிய பரீட்சை முறைமை இலங்கையில் பல தசாப்தங்களாக கல்வியின் பாதுகாப்பு அரணாக இருந்து வருவதுடன், க.பொ.த சா.தரத்திற்கு 50+ பாடங்களையும், க.பொ.உ தரத்திற்கு 60+பாடங்களையும் வழங்குகின்றது, ஆனால், அது, அதிக சுமை கொண்டதுடன், கால தாமதத்தினால் பாதிக்கப்படுகின்றது. அளவை விட தரத்திற்கு முன்னுரிமையளிக்கின்ற முறைமையொன்றுக்கான மாற்றங்கள் அவசியமானவையாகும்.

மேலும், அரச பாடசாலைகளில் கல்வி வழங்குவதில் காணப்படும் இடைவெளிகளுக்கு பதிலளிக்கும் வகையில் கட்டுப்பாடற்ற தனியார் கல்வித் தொழிற்துறை உருவாகியுள்ளதுடன், இதன் விளைவாக கல்வி முறைமையானது தனியார் கல்விக் கட்டணமாக செலுத்ததப்பட்டுள்ள தனியார் பங்களிப்புகள், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாகவும் செலுத்தப்படும் பங்களிப்புகளில் பெரிதும் தங்கியுள்ளது. சக்திவாய்ந்த குழாம் உயர்கல்வித் துறையில் தனியார் முதலீடுகளைத் தடுப்பதன் விளைவாக அரசின் கல்விச் செலவுகள் தேவையின்றி உயர் கல்வியை நோக்கி சாய்கின்றன (PERC, 2023).

இலங்கை அதனது கல்வித் துறையினை அவசர உணர்வுடன் மாற்றவேண்டித் தேவைப்படுகின்றது.

## உருமாற்றத்திற்கான கொள்கை உருவரைச்சட்டகம்

செயற்கை நுண்ணறிவு (AI) , காலநிலை மாற்றம் மற்றும் உள்நாட்டு, பூகோள சமூக - பொருளாதார யதார்த்தங்கள், மற்றும் கல்வியில் அவற்றின் தாக்கங்கள் உள்ளடங்கலாக வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் பற்றிய புரிதலின்றி கல்வியின் மாற்றமொன்றை எதிர்வுகூற முடியாது.

செயற்கை நுண்ணறிவின் (AI) முன்னேற்றங்களுடன், பழமைவாத எதிர்கால சூழ்நிலை என்பது, "பாடசாலக்கல்வியின் கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன, ஆனால் போடசாலைக்கல்வி அதிக தனிப்பட்ட கற்றல் மற்றும் ஏனைய புதிய முறைகளுடன் விரிவாக்கப்படுகின்றது" (OECD 2022).

அதிக துலைதூர சூழ்நிலையானது, "கல்வி எல்ல இடங்களிலும், எந்த நேரத்திலும் இடம்பெறுகின்றது. ஏனெனில் சமூகம் தானாகவே இயந்திர சக்திக்கு மாறுகின்றதாகையால் (OECD, 2022), முறையான மற்றும் முறைசாராத கற்றலுகளுக்கிடையிலான வேறுபாடுகள் இதற்கு மேலும் ஏற்புடதாகாது". அமைச்சுகள், ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள், தேசிய பரீட்சைகள், மற்றும் ஏனைய நற்சான்றிதலளித்தல் முறைகள் அத்துடன், தற்போதிருக்கின்ற கல்வி வழங்குநர்களை தொடர்புபடுத்து வதன் மூலம் இதற்குமேலும் அத்தகைய அதிகளவில் எதிர்கால சூழ்நிலையில் கற்பவர்களுக்குப் பொருந்தமாகாது.

செயற்கை நுண்ணறிவுக்கு (AI) மேலதிகமாக, காலநிலை மாற்றம் மற்றும் சமூக-பொருளாதார நிலைமைகளின் எதிர்கால போக்கில் நிச்சயமற்ற தன்மை ஆகியவை எதிர்கால கல்விச் சூழ்நிலையை துல்லியமாக எதிர்வுகுறுவதை சிரமமாக்குகின்றன.

எதிர்காலக் கல்விச் சூழல் எதுவாக இருந்தாலும், இத்துறையின் கட்டமைப்பில் ஆழமான மற்றும் அமைப்புரீதியான மாற்றங்கள் இன்றி இலங்கை முன்னோக்கிச் செல்ல முடியாது. பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கல்வியில் ஏனைய செயற்பாட்டுச் பிரச்சினைகளில் சீர்திருத்தம் செய்வதற்கான முன்னைய முயற்சிகள் நிலைத்திருக்கவில்லை. இச்சீர்திருத்தங்கள், இத்துறையின் கட்டமைப்பில் பாரிய முறையான மாற்றங்களுடன் இணைக்கப்படாமையே அவை நிலைத்திருக்க முடியாமைக்கான காரணமாகும்.எனவே, எந்தவொரு முறைமை மாற்றமும் கல்வி முறைமையின் நிலையான மாற்றத்திற்கு இட்டுச் செல்வதுடன், நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு அறிவார்ந்த, ஆற்றலுள்ள மற்றும் மனப்பாங்குரீதியில் மேம்பட்ட இலங்கையர்களை தயார்படுத்துதல் வேண்டும்.

தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்திலுள்ள கொள்கைக் கூற்றுக்கள், கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல்; ஆளுகை; முதலீடுகள் மற்றும் வளங்கள் ஆகிய மூன்று கொள்கை களங்களின் கீழ் வழங்கப்படுவதுடன், மாற்றத்திற்குத் தேவையான விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது சட்டத்தை வகுத்தமைப்தற்கான திட்டவடிவமைப்பை வழங்குதல்.

**தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் (NEPF) 2023-2033 பின்வருவனவற்றை இலக்காக கொள்கின்றது.**

இலங்கையில்பொருத்தமானதொரு கல்வி மாற்றத்திற்காக,

- கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல் விதிகளை மறுபரிசீலனை செய்தல்,
- நிருவாகத்திலுள்ள செயற்பாட்டாளர்களை மற்றும் நிறுவனங்களை மீள வரையறுத்தல், அத்துடன்,

- முதலீடுகள் மற்றும் வளங்களை மேம்படுத்துதல் இலங்கையில் கல்வியில் நிலையான ஆதாயங்கள்

கல்வியின் உப துறைகள், பொதுக் கல்வி (ஆரம்ப பிள்ளைப் பருவம், ஆரம்ப மற்றும் இரண்டாநிலைக் கல்வி உட்பட) மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி ( உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி உட்பட) ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட பரந்தளவிலான மாற்றங்கள், அனைத்து உப துறைகளுக்கும் பொதுவானவை, ஆனால்,மாகாண கல்விச் சபை கொள்கை கூற்றுக்கள் தேவைக்கேற்ப உப துறைகளால் வரையறுக்கப்படுகின்றன.

## உருமாற்றல் செயன்முறைகள்

இலங்கை 10 வருடங்களுக்குள் கல்வியை வெற்றிகரமாக மாற்ற வேண்டுமாயின், தேவையான விதிகள், ஒழுங்குவிதிகள், சட்டவக்கங்கள் மற்றும் தொடர்புடைய செயலாற்றுகை நடவடிக்கைகளின் தீர்மானமொன்று ஆகியவை தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் (2023-2033) அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் நடைமுறையில் இருத்தல் வேண்டும். தன்யைக்கத்துடன் கூடிய மாகாணக் கல்விச் சபைகளை தாபிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள் மற்று சட்டங்கள் உருவாக்கப்படுவதனால், அவை, புதிதாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தன்னியக்கத்தை வழங்கி, அவர்களிடையே **1** முதல் **4** வருட காலப்பகுதி அமுலாக்கத்தில் ஆரோக்கியான போட்டி மனப்பான்மையுடன் செயலாற்றுகை எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வதற்கு பரிசோதனை, கற்றல் மற்றும் புத்தருவாக்கம் ஆகியவற்றில் உடனடியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.




| உருவாக்குதல் | பிரயோகித்தல் | பேணிவளர்த்தல் |
|---|---|---|
| ஒவ்வொரு களத்திற்குமான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டவாக்கங்கள் | செயற்பாட்டாளர்களுக்கு புத்துருவாக்கத்திற்கு தன்னுரிமை வழங்குதல் | கல்வி மாற்றத்திற்கான புத்துருவாக்கங்கள் |

4 - 10 ஆண்டுகள் கல்வியை மாற்றுவதற்கான புத்துருவாக்கங்களை பேணி வளர்ப்பதற்கான காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

தேசிய கல்விக்கொள்கை உருவரைச்சட்டகமானது (2023-2033), இத்துறையில் எதிர்கால சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டும் ஆவணமொன்றாக விளங்கும்.

ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் கூற்றுக்களின் அடிப்படையில் தேவையான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களை உருவாக்குவதற்கு உள்நாட்டு மற்றும் சருவதேச நிபுணர்களின் உதவி நாடப்படுதல் வேண்டும்.

தற்போதுள்ள வளங்களை மீளப்பயன்படுத்துதல், அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டாண்மைகள் மற்றும் தனியார் பங்களிப்புகள் மூலம் மேலதிக வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த மாற்றத்திற்கான நிதி பெருமளவில் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக முதலீடுகள் தேவைப்படும், ஆனால் அவை தேசிய கல்விக்கொள்கை உருவரைச்சட்டகத்தால் இனங் காணப்பட்ட முன்னுரிமைகளுக்குள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

## கொள்கை மூலோபாயம்

### இலக்கு

தேசிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக, கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றளித்தல்; ஆளுகை; முதலீடுகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றுக்கான களங்களுக்குரிய முறைமைசார் மாற்றங்கள் ஊடாக கல்விமுறைமையை அணுகுதல், தரம், பொருத்தமாந்தன்மை மற்றும் டிஜிட்டல் மாற்றத்தை நிலையாக மேம்படுத்துதல்.

### பிரதான குறிக்கோள்கள்

- ஆக்கத்திறன், புத்துருவாக்கம் மற்றும் மக்கள் பற்றிய உணர்வுடன் அறிவூட்டப்பட்ட பிரசைகளை உருவாக்குதல்
- இலங்கை அதிகளவில் கவரத்தக்க கல்வி மையமொன்றாக விளங்குதல்
- அனைத்து பிள்ளைகளுக்கும் டிஜிட்டல் கற்றல் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவுக்கான சம வாய்ப்புகள்
- தொழிலணியின் தேர்ச்சியற்ற தொழில் சனத்தொகையை 10% வரை குறைத்தல்
- வர்க்கம்,இனம்,சாதி,மதம்,தேசியம்,மொழி,வருமானம் அல்லது இயலாமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அனைத்து பிள்ளைகளும் கல்சவியைப் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது
- உலகளாவிய போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்ட, இற்றைப்படுத்தப்பட்ட கல்வி முறைம

## எதிர்பார்க்கப்பட்ட பிரதான மாற்றங்கள்

தேசிய கல்விக்கொள்கை உருவரைச்சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைக் கூற்றுக்கள் ஊடாக எதிர்பார்க்கப்பட்டுள்ள பிரதான மாற்றங்களை கீழேயுள்ள அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது. அவை களங்கள் மற்றும் கல்வியின் உப பிரிவுகள் வர்ண குறியீடுகள் மூலம் படிமுறையாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**படிமுறை**

| |
|---|
| **ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வி** |
| **பொதுக் கல்வி** |
| **மூன்றாம்நிலைக் கல்வி (உயர்+ தொழில்)** |
| **அனைத்து கல்வித் துறைகள் முழுவதும்** |

**அட்டவணை 1 – எதிர்பார்க்கப்பட்ட பிரதான மாற்றங்களின் பொழிப்பு**

| ***களம்*** | ***எதிர்பார்க்கப்பட்ட மாற்றம்*** | ***கொள்கைக் கூற்று*** |
|---|---|---|
| **கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல்** | 1. 'சமயங்களும் விழுமியங்களும்' என்ற பாடம் சமூகத்தில் நல்லிணக்கத்தை அதிகரிப்பதற்கு அனைத்து சமயங்களைப் பற்றியும் மாணவர்கள் கற்பதற்கு அனுமதிக்கும் | 6.4 |
| | 2. எந்தப் பாடசாலையிலும் ஆங்கிலமொழி மூலமான கல்வித் தெரிவு. | 6.2 |
| | 3. அனைத்து மாணவர்களும் இரண்டு தேசியமொழிகளிலும், ஆங்கிலம், கணிதம் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவிலும் ஒவ்வொரு கல்வி மட்டத்திற்கும் பொருத்தான வகையில் தேர்ச்சி பெற்றிருத்தல். | 6.1 |
| | 4. கலந்து கற்றுக்கொள்ளுதல், நினைவாற்றல் கற்றல் மற்றும் ஏனைய 21 ஆவது நூற்றாண்டு அணுகுமுறைகள் அனைத்து வகுப்பறைகளுடன் கூட்டிணைக்கப்பட்டிருத்தல். | 6.8 |
| | 5. செயற்கை நுண்ணறிவு, காலநிலை மாற்றம், நிலையான அபிவிருத்தி, மற்றும் ஏனைய வளர்ந்துவரும் உலகளாவிய முன்னுரிமைகள் பற்றிய அறிவினை அனைத்து மாணவர்களும் கொண்டிருத்தல் | 6.9 & 6.11 |
| | 6. பாடவிதான அல்லது இணை பாடவிதான செயற்பாடுகள் ஊடாக தொழில் முயற்சியாண்மை, நிதிசார் அறிவு மற்றும் ஏனைய செயற்பாடுசார் திறன்கள் | 6.10 |
| | 7. பொதுக் கல்வியிலுள்ள அனைத்து மட்டங்களிலும் சருவதேச திறனளவுகளுக்கெதிராக தரப்படுத்தப்பட்டுள்ள பொருத்தமான தேசிய பாடவிதானம் மற்றும் மதிப்பீடுகள். | 6.12 & 6.22 |
| | 8. பொருளாதாரத்தின் பிரதான துறைகளில் திறன்களை விருத்தி செய்வதிலுள்ள நியமங்கள் மற்றும் பாட விதானங்கள் உரிய திறன்கள் சபைகளால் உருவாக்கப்படுதல். | 6.13 |
| | 9. தொழில்சார் அல்லது வாழ்க்கைத்தொழிலின் வழிகளுடனான முன்னேற்றத்தின் பல வழிகளுடன்கூடிய கல்வியிலோ மற்றும் /அல்லது திறன்களின் தடத்திலோ பாடங்களின் சேர்க்கை. | 6.16 |
| | 10. 12+ ஆண்டு கல்வியில் 11 ஆம் ஆண்டு மற்றும் 12+ ஆம் ஆண்டு இறுதியில் நிறைவுசெய்தமைக்கான சான்றுகள் அவர்களது கற்றலின் முழு அளவைப் பிரதிபலிக்கின்றது. | 6.16 & 6.17 |
| | 11. இறுதிப் பரீட்சைக்கு குறைந்த அழுத்தமும், கருத்திட்ட | 6.6 & |

| *களம்* | *எதிர்பார்க்கப்பட்ட மாற்றம்* | *கொள்கைக் கூற்று* |
|---|---|---|
| | அடிப்படையிலான மதிப்பீடுகளுக்கு அதிகளவிலான அழுத்தம் வழங்கப்பட்டுள்ளது. | 6.17 |
| | 12. நிகழ்ச்சித்திட்டங்கள் முழுதிலும் எந்த இடத்திலும் மீள உள்நுழைதல் மற்றும் மாற்றங்கள். | 6.19 |
| | 13. முக்கியமான நிலைகளில் கட்டாய தொழில் வழிகாட்டல் நெறிமுறை. | 6.21 |
| | 14. சருவதேச மற்றும் உள்நாட்டு தகைமைகளுக்கிடையிலான திட்டமிடப்பட்ட செயன்முறை மற்றும் பரிமாற்றங் களுக்கான பொறிமுறை. | 6.23 |
| | 15. விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்களுக்கு நன்மை பயப்பதற்கு பிரத்தியேகமான கற்றல் அணுகுமுறைகள் ஏற்பாடு செய்யப்படுதல். | 6.25 |
| | 16. உயர் சாதனை படைத்த மாணவர்களின் தேவையை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட துரிதப்படுத்தப் பட்ட கற்றல் செயன்முறைகள். | 6.26 |
| | 17. சான்றுதலளிக்கின்ற,வெகுமதியளிக்கின்ற பொறிமுறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை மீள்சீராக்கம் செய்வதன் மூலம் தகைமையுடைய ஆட்களை கவருவதற்காக கற்பித்தல் தொழில் மாற்றப்பட்டிருத்தல். | 6.27 |
| | 18. ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் தொடர்ச்சியாக பயிற்றுவிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கு வதற்காக அவர்களது இயலுமை வளர்க்கப்பட்டிருத்தல் | 6.28 |
| | 19. கல்வியின் அனைத்து நிலைகளிலும் உள்ளகப்பயிற்சி மற்றும் பயிலுநர்நிலை | 6.29 (1)(c) |
| | 20. கற்பித்தல் மற்றும் கற்றல் கருவிகளாக ஏனைய தொழில் நுட்பங்களுக்கிடையில் செயற்கையான நுண்ணறிவு | 6.29 (2) |
| | 21. செம்மைப்படுத்தப்பட்ட பாடவிதானம் மற்றும் நியமங்களுக் கான உலகளாவிய வெளிப்பாட்டையும், ஒத்துழைப்பையும் பேணிவளர்ப்பதற்கான சர்வதேச இணைப்புகள். | 6.29 (3) |
| **ஆளுகை** | 22. கல்வி அமைச்சு, கொள்கை வழிகாட்டல் மீது கவனஞ் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. | 7.1 & 7.3 |

| *களம்* | *எதிர்பார்க்கப்பட்ட மாற்றம்* | *கொள்கைக் கூற்று* |
|---|---|---|
| | 23. கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூன்று அமைப்புகளுள்ளன;<br>- தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு பதிலீடு செய்யப்படவுள்ள கல்விக்கான தேசிய ஆலோசனைக் குழு<br>- கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான நிபுணர் குழு<br>- மாகாண கல்வி அதிகாரிகளின் பணப்பாளர் குழாம் | 7.4 |
| | 24. தேசிய தரநியமங்களுக்கமைவாக புதிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண கல்வி சபைகள். | 7.4 |
| | 25. அனைத்து பாடசாலைகளும் மாகாண பாடசாலைகளாக இருத்தல் வேண்டும். தேசிய பாடசாலைகள் இல்லாதொழிக்கப்படும். | 7.5 |
| | 26. கல்வி அபிவிருத்திச் சபை, அவர்களது நியாயாதிக்கத்திற்குள் நிருவாகம் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான தன்னியக்கத்துடன் கூடியதாக பிரதேச மட்டத்தில் நிறுவப்படுதல் | 7.5 |
| | 27. ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகமானது இத்துறையிலுள்ள ஒருங்கிணைப்பு பிரச்சினைகளை நிறைவுறுத்தி தேசிய கல்வி நிறுவகத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருத்தல். | 7.6 |
| | 28. தற்போதிருக்கின்ற அரச தொழில் பயிற்சி வழங்குநர்களை ஒன்றுசேர்ப்பதற்கான பணிப்பாணையாக மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவானது,தேசிய திறன்கள் ஆணைக்குழுவாக மாற்றப்படுதல். | 7.7 |
| | 29. அரச மற்றும் அரசல்லா நிறுவனங்கள் இரண்டுக்குமான பொறுப்புடன் தேசிய உயர் கல்வி ஆணைக்குழுவாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மாற்றப்படுதல் வேண்டும். | 7.8 |
| | 30. அனைத்து துறைகளிலும் ஒத்த தரத்தை உறுதிப்படுத்தி, நற்சான்றிதலளித்தலை செயற்படுத்துவதற்கு தேசிய தர உறுதிப்படுத்தல் மற்றும் நற்சான்றிதலளித்தல் பொறிமுறை தாபிக்கப்பட்டிருத்தல். | 7.9 |
| | 31. கல்வி ஏற்பாட்டாளர்களும், தேசிய மற்றும் மாகாண அதிகாரிகளால் உருவாக்கப்படுகின்ற வழிகாட்டி நெறிகளுக்குள் தன்னியக்கத்தைக் கொண்டிருத்தல். | 7.10 & 7.4 |
| | 32. அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்த தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரத்தை செயல்படுத்த தேசிய தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார வழிமுறை நிறுவப்பட்டது | 7.9 |

| *களம்* | *எதிர்பார்க்கப்பட்ட மாற்றம்* | *கொள்கைக் கூற்று* |
|---|---|---|
| **முதலீடுகள் மற்றும் வளங்கள்** | 33. அனைத்துத் துறைகளிலும் அரச - தனியார் கூட்டாண்மைகள் உள்ளடங்கலாக அரச சார்பற்ற தரப்பினர்களின் பங்குபற்றல். | 8.1 |
| | 34. ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்விக்கான ஏற்பாடுகள் கூட்டாண்மைகள் ஊடாக உச்சளவிலாக்கப்பட்டுள்ளமை. | 8.2 |
| | 35. அடிப்படையில் அரசாங்க நிதியிடல் ஊடாக அரச நிறுவனங்களில் பொதுக் கல்விக்கு நிதியளித்தல். பின்தங்கிய பாதிப்படையக்கூடிய பிள்ளைகள் /சமூகங்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் நிறுவனங்களுக்கு விசேட ஏற்பாடுகள். | 8.3 |
| | 36. அரச நிறுவனங்களில் மூன்றாம்நிலைக் கல்விக்கு மூன்று பிரிவுகள், அதாவது அரசாங்க நிதியிடல், மாணவரின் பங்களிப்புகள் மற்றும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஏனைய நிதியங்கள் ஊடாக நிதியளித்தல். | 8.4 |
| | 37. மூன்றாம் நிலைக் கல்வியில் வரிசை விடய அடிப்படையிலான நிதியிடலிருந்து உள்ளீர்ப்பு அடிப்படையிலான நிதியிடலுக்கு மாறுவதற்கு மூன்று ஆண்டு கால அவகாசம் | 8.4 |
| | 38. அரச அல்லது அரசல்லாத மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு மாணவர்கள் அரசாங்க மானியங்கள் மற்றும் அரசாங்க ஆதரவு கடன்களைப் பெறுதல். | 8.4 (2) & 8.5 |
| | 39. உயர் கல்வியில் மற்றும் திறன்கள் விருத்தியில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உரிமைத்துவத்தை வரையறுப்பது அகற்றப்பட்டிருத்தல். | 8.10 |
| | 40. வசதிகள் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களைத் தாபிப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு கடனடிப்டையில் ஊக்குவிப்புத் திட்டங்கள். | 8.11 |
| | 41. கற்பித்தலில், டிஜிட்டல் மாற்றத்தில், தொழில் மற்றும் சருவதேச தொடர்புகளில் ஆய்வுக்காக, புதிய படைப்புகளுக்காக கல்வி நிறுவனங்களுக்கு போட்டித்தன்மையான நிதியிடல் மற்றும் /அல்லது ஊக்குவிப்புகள்.. | 8.12 |

# பொருளடக்கம்


நிறைவேற்றுநர் சுருக்கவுரை ........ 2

**உருமாற்றத்திற்கான கொள்கை உருவரைச்சட்டகம் ........ 2**

**உருமாற்றல் செயன்முறைகள் ........ 4**

**1. அறிமுகம் ........ 12**

**2. பயன்பாடு மற்றும் நோக்கம் ........ 13**

**3. கொள்கை இலக்கு ........ 14**

**4. கொள்கை குறிக்கோள்கள் ........ 14**

அடைவதற்கான வழிகள் ........ 14

தரம் ........ 14

**பொருத்தமாந்தன்மை ........ 15**

**டிஜிட்டல் மாற்றம் ........ 15**

**5. கொள்கைத் தத்துவங்கள் ........ 17**

**6. கொள்கைக் கூற்றுக்கள் |கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல் ........ 18**

**7. கொள்கைக் கூற்றுக்கள் | ஆளுகை ........ 27**

**8.** கொள்கைக் கூற்றுக்கள் **|** முதலீடுகள் மற்றும் வளங்கல் ........ 32

**பின்னிணைப்பு 1 ........ 34**

# 1. அறிமுகம்

கல்வித் துறையானது, இலங்கையின் பொருளாதார செயலாற்றுகையில் மற்றும் மீட்சியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற மனித மூலதன அபிவிருத்தியின் பிரதான உந்துசக்தியாகும். வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதார விளைவுகளுக்கு கல்வியின் தரத்தையும் பொருத்தத்தையும் மேம்படுத்துவதற்கு இத்துறையில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணிக்கின்றது. நன்கு கல்விகற்ற தொழிலணியானது, சிக்கலான பணிஇலக்குகளை ஆற்ற முடியும், புத்துருவாக்கங்களை மேற்கொள்ள முடியும் என்பதுடன், மாறிவரும் சமூக - பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளவும் முடியும். இது, தொழில்நுட்பம், அறிவியல், நிலைத்ததன்மை மற்றும் எதிர்காலம் சார்ந்த சிந்தனை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச்செய்ய முடியும். எனவே, நாட்டின் ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் உலகளாவிய ரீதியில் அதிகளவு போட்டித்தன்மை கொண்டதாக மாறுகின்ற வகையில் படிப்படியாக ஆனால், நிலையான மாற்றத்தை அடைவதை அரசாங்கம் இலக்காகக் கொள்கின்றது.

இலங்கையின் கல்வி முறைமையானது, உலகளாவிய அணுகுகை, உயர் கல்வியறிவு வீதங்கள் மற்றும் பாலின சமத்துவம் போன்ற அத்தகைய பல சாதனைகளை கொண்டுள்ளது. இருப்பினும், இது அபிவிருத்திக்கான அதன் அபிலாசையை கட்டுப்படுத்துகின்ற சில தடைகளையும் எதிர்கொள்கின்றது. எடுத்துக்காட்டாக, இது, உயர் கல்வியில் குறைந்தளவிலான பங்குபற்றல், திறனுள்ள வேலையாளர்கள் அதிகளவில் புலம்பெயர்தல் மற்றும் கற்பவர்களிடையே உரிமை உணர்வு ஆகியவற்றைக் கொண்டிருக் கின்றது. இந்த பிரச்சினைகள் படைப்பாற்றல், திறமைகள் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்காத காலாவதியான மற்றும் நெகிழ்வுப்பொக்கற்ற கல்வி முறைமையிலிருந்து உருவாகின்றன. இலங்கை யானது, முழுமையான மற்றும் வாழ்நாள் கற்றலைப் பேணி வளர்ப்பதற்கு அதன் பாடத்திட்டத்தை, கற்பித்தலை மற்றும் மதிப்பீட்டு முறைகளை மாற்றியமைக்க வேண்டித் தேவைப்படுகின்றது.

இலங்கையின் கல்வி முறைமையானது, அண்மைய பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் விரிவானதொரு மறுசீரமைப்பினைத் தேவைப்படுத்துகின்றது. நாட்டின் அபிவிருத்தியும், மீட்சியும், ஆக்கபூர்வமான, நெருக்கடியான நிலையொன்றில் எழுகின்ற சவால்களை எதிர்கொள்கின்ற அதன் மக்களினதும், வேலையாளர்களினதும் இயலமையில் தங்கியிருக்கின்றது. இதனை அடைவதற்கு, தேசிய கல்வி முறைமை, அதன் இறுக்கமான கட்டமைப்பிலிருந்து விலகி, தொலைநோக்குத் திட்டம் 2048 உடன் இணைந்துள்ள 21 ஆம் நூற்றாண்டின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை வளர்க்கும் மிகவும் நெகிழ்வுப்போக்கான, புதுமையான அணுகுமுறையை விரும்பி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பின்வரும் விளக்கவுரை, மாறுபட்ட தனிநபர்களை வளர்க்கின்ற, செயற்படுத்துகின்ற மற்றும் அவர் களை அறிவார்ந்த, கடினமாக உழைக்கின்ற மற்றும் குடிமக்கள் பற்றிய சிந்தனைகொண்ட பிரசைகளாக வடிவமைக்கின்ற நியாயமான, பிரத்தியேகமான, முழுமையான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் நெறிப்படுத்தப்பட்ட கல்வி முறைமையை உருவாக்குகின்ற தொலைநோக்கு 2048 இனை முன்வைக்கின்ற வரைவு தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகம் 2023-2033 ஆகும்.

## 2. பயன்பாடு மற்றும் நோக்கம்

இந்த கொள்கை உருவரைச்சட்டகம், 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் கல்வி விவகாரங்கள் தொடர்பான சனாதிபதி செயலணியினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான வேலைக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பாராளு மன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையினாலும், தேசிய கல்விக் கொள்கைக் உருவரைச்சட்டகத்தினை (NEPF) உருவாக்குவதற்கு அமைச்சரவை உப குழுவுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குழுவின் ஐந்து முக்கிய நிபுணர்கள் குழுமங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சுருக்க அறிக்கைகளாலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உருவரைச்சட்டகம், தற்போதிருக்கின்ற சவால்கள் (பின்னிணைப்பு 1), கொள்கை இலக்குகள், குறிக்கோள்கள், கொள்கையின் தத்துவங்கள் அவற்றைக் கடப்பதற்கான மற்றும் கூற்றுக்களை கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த உருவரைச்சட்டகம், கொள்கை அமுலாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கான தெளிவான மற்றும் ஒத்திசைவான வழிகாட்டலொன்றை வழங்குவதை இலக்காக கொண்டிருக்கின்றது. இந்த உருவரைச்சட்டகமானது, தேவைக்கேற்ப இற்றைப்படுத்தக்கூடிய, மீளாயக்கூடிய உயிரோட்ட முள்ள ஆவணமொன்றாக விளங்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

இந்த கொள்கை உருவரைச்சட்டகம், தேசிய கொள்கை ஆவணமொன்றின் அத்தியவசிமான பிரிவு களான கொள்கைத் தத்துவங்கள் மற்றும் கூற்றுக்களை கொண்டிருக்கின்றது. அவை கீழே விளக்கப்பட்டுள்ள பின்வருகின்ற மூன்று களங்களுடன் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

1) **கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல்** களம் அது தொடர்பான விதிகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் செயன்முறைகளில் மாற்றங்களைப் பதிவு செய்கின்றது.

2) **ஆளுகைப்** களம் செயற்பாட்டளர்கள் மற்றும் நிறுவனங்களின் மேம்படுத்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுக்கோப்பினை குறிக்கின்றது.

3) **முதலீடுகள் மற்றும் வளங்கள்** களம், நிதிசார் மற்றும் ஏனைய வளங்களை மீளசீரமைத்தல் மற்றும் உச்சப்பயன்பாட்டைக் குறிக்கின்றது.

இந்த கொள்கை களங்கள், பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளை கண்டறிவதற்கு அத்தியவசியமனவை என்பதுடன். விரும்பிய பெறுபேறுகளை முழுமையாக அடைவதற்கு அவசியமானவையுமாகும். அவை, கல்வித் துறையின் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒத்திசைவான, விரிவான உருவரைச்சட்டகமொன்றை உருவாக்குகின்றன.

# 3. கொள்கை இலக்கு

தேசிய கல்விக் கொள்கை உருவரைச்சட்டகத்தின் (2023-2033) ஒட்டு மொத்த இலக்கு, தேசிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக, கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றளித்தல்; ஆளுகை; முதலீடுகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றுக்கான களங்களுக்குரிய முறைமைசார் மாற்றங்கள் ஊடாக கல்வி முறைமையை அணுகுதல், தரம் மற்றும் பொருத்தமாந் தன்மை அத்துடன் டிஜிட்டல் மாற்றத்தை நிலையாக மேம்படுத்துவதாகும்.

# 4. கொள்கை குறிக்கோள்கள்

## அடைவதற்கான வழிகள்

- அனைத்து பிள்ளைகளுக்கும் அவர்களின் விருப்பத்திற்கும் தனித்துவமான இயலுமைகளுக்கும் பொருந்துகின்ற கல்வி முன்னேற்றத்திற்கான பாதைகள் கிடைக்கப்பெறுதல்.
- வர்க்கம்,இனம்,சாதி, மதம், தேசியம்,மொழி,வருமானம் அல்லது இயலாமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அனைத்து பிள்ளைகளுக்கும் முன்னேற்றப் பாதைகளுக்கான வழியினை உறுதிப்படுத்துதல்.
- அடைவதற்கான வழிகள், அனைத்து பிள்ளைகளுக்கும் டிஜிட்டல் கற்றல் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவுக்கான சம வாய்ப்புகளை உள்ளடக்குகின்றது.

## தரம்

- கல்வி முறைமையானது, ஆக்கத்திறன், புத்துருவாக்கம் மற்றும் மக்கள் பற்றிய உணர்வுடன் அறிவூட்டப்பட்ட பிரசைகளுக்கு வழிவகுக்கின்றது
- காலநிலை மாற்றம் உள்ளடங்கலாக, சமூக , பொருளாதார, உயிரியல் மற்றும் பௌதீக சூழல் ஆகியவற்றில் நிச்சயமற்ற எதிர்கால மொன்றிற்காக மக்கள் தயாராக்கப்படுதல்.
- இலங்கையானது, வெளிநாட்டு மாணவர்கள், கல்வி வழங்குநர்கள் மற்றும் கல்வியாளர்களை



அதிகளவில் கவரத்தக்க கல்வி மைய மொன்றாக உயர்வடைதல்.

- இலங்கை கல்வி போட்டித்தன்மையானது என்பதுடன், உலகளாவியரீதியிலான நியமங் களுடன், **21** ஆம் நூற்றாண்டின் போக்குகளுடன் இற்றைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றன.
- கல்வி முறைமையானது, போட்டித்தன்மையை உறுதிப்படுத்து வதற்கும், உலகளாவிய அளவுத் திட்டமொன்றில் பிரகாசிப்பதற் கான சிறந்த வாய்ப்பை எமது மாணவர்களுக்கு வழங்குவதற்கும் தொடர்ந்தேர்ச்சியாக மதிப்பிடப்படுவதுடன், விரைவாக இற்றைப் படுத்தப்படுகின்றது.

## பொருத்தமாந்தன்மை

- கல்வியின் தேசிய இலக்குகளால் இலங்கை சமூகம் வடிமைக்கப்படுகின்றது.
- நாட்டின் பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கு, திறனற்ற தொழிலணியின் மக்கள்தொகை 10% ஆக அல்லது குறைவாக குறைக்கப்பட்டுள்ளது.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் ஈர்ப்பதற்கு உலகளாவிரீதியில் இனங்காணப்பட்ட திறன்கள் மற்றும் தகைமைகள் நியமங்களை இலங்கை நிறைவேற்றுகின்றது.

## டிஜிட்டல் மாற்றம்

- டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உள்ளடக்கம், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் அடித்தளம் மற்றும் கற்பித்தல் மற்றும் கற்றல் மெய்நிகர் முறைகள் போன்ற அத்தகைய டிஜிட்டல் கருவிகள், பிரத்தியேகமானமான கல்வியை உறுதிப்படுத்துவதற்காக மாறுபட்ட கற்றல் மாதிரிகளுக்கும் ஆற்றல்களுக்கு இடமளிக்கும் வகையில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.
- கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறைகள் ஊடாடுகின்ற, ஈடுபாடுடைய, முழுமையான மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் சார்ந்து கிடைக்கப்பெறுதல்.
- தரவுப் பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவை, கற்றல் பெறுபேறுகளையும், செயன்முறைகளையும் பெருத்தமான வகையில் கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் செம்மைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.
- கல்வியானது, டிஜிட்டல்மயாக்கல் மூலம் சுயமாக இயக்கப்படுகின்ற, தனிப்பயனாக்கப் படுகின்ற, அதிக ஈடுபாடுகொண்ட, இணைக்கப்பட்ட மற்றும் தரவினால் இயக்கப்படுகின்றது.
- மாணவர்கள் டிஜிட்டல் கல்வியறிவு பெற்றவர்கள் என்பதுடன், டிஜிட்டல் சகாப்தத்தின் மாறிவரும் தேவைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப திறன்களைக் கொண்டுள்ளனர்.

## 5. கொள்கைத் தத்துவங்கள்

கல்வியை வரையறுப்பதிலும் வடிவமைப்பதிலும் தனித்துவமான மற்றும் விரிவான பங்கைக் கொண்ட மூன்று களங்களின் நியதிகளில் கொள்கைத் தத்துவங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல்

கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் செயன்முறைகள் நாட்டில் மாறுபட்ட மற்றும் ஆற்றல்மிக்க மனித மூலதன வளத் தொகுப்பிற்காக, திறமையற்ற மக்கள் தொகையைக் குறைப்பதற்கும், நற்சான்றிதழ் பெற்றவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கும், புத்துருவாக்கம் மற்றும் படைப்பாற்றலைப் பேணி வளர்ப்பதற்கும் அனைத்து கற்போருக்கும் தடையற்ற கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை உறுதிப்படுத்தும்.

### ஆளுகை

இத்துறையில் அரசு மற்றும் அரசு சாராத பங்குகளைக் கொண்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டு, துணைநிலைக் கோட்பாட்டின் அடிப்படையில் தன்னியக்கத்தை அனுமதித்து, உயர்மட்ட முடிவுகளை எடுப்பதைக் குறைப்பதற்கும், நிறுவனங்கள் தனியாகச் செயற்படுவதைத் தவிர்க்கவும் தேசிய நியமங்களுடன் ஒத்திசைவை உறுதிப்படுத்தி அவற்றின் வகிபாகங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்படுதல் வேண்டும்.

### முதலீடுகள் மற்றும் வளங்கள்

அரச அல்லது தனியார் கல்விக்கான வளங்கள், கல்வியை நாடுகின்ற அனைவரும் கற்பதற்கான பாதைகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், உகந்ததாக விளங்குதலும் வேண்டும். அத்துடன், கல்விக்கான அரச நிதியிடல், நிதி, ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்விக்கு மற்றும் பாடத்திட்டம் அல்லாத செயற்பாடுகள் உள்ளடங்கலான 12+ ஆண்டு பாடசாலை காலப்பகுதிக்கு தடையாக இருக்காத அதேவேளை பொதுக் கல்விக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

# 6. கொள்கைக் கூற்றுக்கள் |கற்பித்தல், கற்றல் மற்றும் நற்சான்றிதலளித்தல்

## பாடவிதானம் மற்றும் கற்றல்

6.1 எல்லா மாணவர்களும், ஆரம்ப, கனிஷ்ட இரண்டாம்நிலை மற்றும் சிரேஷ்ட இரண்டாம்நிலை கல்வி படிநிலைகளின் முடிவில் இரண்டு தேசிய மொழிகளில் (தமிழ் மற்றும் சிங்களம்) மற்றும் இணைந்த மொழி(ஆங்கிலம்), கணிதம் மற்றும் டிஜிட்டல் அறிவு ஆகியவற்றில் குறைந்தபட்ச தேர்ச்சியைக் (தீர்மானிக்கப்படவுள்ள) காட்டுதல் வேண்டும்.

6.2 பொதுக் கல்வியில் போதனா மொழிமூலமானது, ஏதேனும் பாடசாலையில் ஆங்கில மொழிமூலத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கற்பதற்கு முன்னுரிமை யளிக்கும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டு மாற்றப்படுதல் வேண்டும்.


6.3 இலங்கையின் செழிப்பான வரலாறு, கலாசாரம், விழுமியங்கள், அதனது இன, மத பல்வகைமை தொடர்பாக பாடவிதானம் ஊடாக கற்பதற்கும் பெருமைமிகு பிரசைகளாக உலகில் இலங்கையின் அடையாளத்தை பதியவைப்பதற்கான வாய்ப்புக்களை மாணவர் அனைவரும் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 மதம்சார் கல்வியானது, நடைமுறையிலுள்ள சமய பாடத்திற்கு பதிலாக அறிமுகப்படுத்தப்படவுள்ள 'மதங்களும் விழுமியங்களும்' பாடம் ஊடாக மாணவர் ஏற்றுக்கொண்ட மதம் தொடர்பான கற்றலுக்கு மேலதிகமாக எல்லா சமயங்களின் முக்கிய அம்சங்கள் பற்றி அறியச்செய்வித்தலில் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

6.5 கற்றல் இலக்குகள்;

- முன்பள்ளி கற்றல் இலக்குகள் ஆறு முக்கிய கற்றல் விடயங்களின் கீழ் கட்டமைக்கப்படுதல் வேண்டும். அவையாவன: அழகியலும் படைப்பாற்றல் செயற்பாடு களும்; உலகை அறிதல்; மொழியும் எழுத்தறிவும்; மோட்டார் திறன் அபிவிருத்தி; எண்ணறிவு; அத்துடன் சமூக மற்றும் உணர்வுசார் அபிவிருத்தி.
- ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலை கல்வியானது, சருவதேச நியம கல்வி வகைப்படுத் தலினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களை பூர்த்திசெய்தல்.
- இலங்கை தகைமை உருவரைச்சட்டகத்திலுள்ள (SLQF) கற்றல் பெறுபேறுகளின்படி மூன்றாம் நிலைக் கல்வி இருத்தல்.

6.6 **2023** ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பாடவிதான மறுசீரமைப்புகள் உள்ளடக்கம் இலகுவானவையும், மிகவும் அர்த்தமுள்ளவையும், பரீட்சைகள் குறைந்த மன அழுத்தத்தைக் கொண்டவை மற்றும் பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடு மிகவும் மதிப்புடையவை என்ற வகையில் மேலும் மேம்படுத்தப்படுதல்.




6.7 திறன்கள் தெரிவுகள் சிரேஷ்ட இரண்டாம்நிலை மட்டத்திலும் (ஆண்டுகள் **10-11)** மற்றும் திறன்களிள் தளம் மேல் இரண்டாம்நிலையில் (ஆண்டு 12+) கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

6.8 கலப்புக் கற்றல், STEAM, நினைவாற்றல் கற்றல் மற்றும் பிற 21 ஆம் நூற்றாண்டு அணுகுமுறைகள் போன்ற அத்தகைய முற்போக்கான கற்பித்தல் மற்றும் கற்றல் அணுகுமுறைகள் அனைத்து வகுப்பறைகளிலும் பரந்த கொள்கைகளாக இணைக்கப்படுதல் வேண்டும்.

6.9 எல்லா கல்வி மட்டங்களிலுள்ள மாணவர் ஒவ்வொருவரும், தரவு பற்றிய அறிவு செயற்கை நுண்ணறிவு மற்றும் அதனது சமூகஞ்சார் தாக்கங்கள் மற்றும் அந்தரங்கம், பாதுகாப்பு, நியாயம், வகைகூறல் மற்றும் ஒவ்வொரு மட்டத்திற்கும் ஏற்புடையவாறு தரவு பயன்படுத்தலில் வெளிப்படைத்தன்மை பிரச்சினை போன்ற தரவு அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை கொண்டிருத்தல் வேண்டும்; அதன்மூலம் மாணவர்கள் அறிவூட்டப்பட்ட பயன்படுத்துநர்கள் என்பதை உறுதிப்படுத்துதல்.

6.10 எல்லா கல்வி மட்டங்களிலுள்ள மாணவர் ஒவ்வொருவரும், பாடவிதான அல்லது இணை பாடவிதான செயற்பாடுகள் ஊடாக முயற்சியாண்மை, நிதிசார் அறிவு, தன்னார்வம் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு திறன்கள், மனப்பாங்கினை கற்பதற்கான வாய்ப்பினை கொண்டிருத்தல் வேண்டும்.

6.11 சுற்றாடல்சார் பாதுகாப்பு, நிலைபேறான அபிவிருத்தி, காலநிலை மாற்றம் தழுவல் மற்றும் நிதிசார் அபாய முகாமைத்துவம் போன்ற உலகளாவிய முன்னுரிமை விடயங்கள் கற்றல் துறையினுள் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும்.

6.12 கல்வியின் அனைத்து நிலைகளிலும் தேசிய பாடத்திட்டங்கள் பொருத்தமான சர்வதேச அளவுகோல்களுக்கு ஏற்ப தரப்படுத்தப்படும்.

6.13 பொருளாதாரத்தின் பிரதான துறைகளில் திறன் அபிவிருத்தியிலுள்ள நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட திறன்கள் மன்றங்களால் விருத்திசெய்யப்படும்.

## மதிப்பீடு மற்றும் முன்னேற்றம்

6.14 பாடசாலை கல்வியின் நான்கு நிலைகளிலும் எதிர்பார்க்கப்படும் கற்றல் பெறுபேறுகளை அடைவதற்கு பல்வேறு தெரிவுகளை மாணவர்கள் கொண்டிருத்தல்:

- ஆரம்பக் கல்வி (ஆண்டு 1-5; வயது 5-10) - அடிப்படை வாழ்க்கைத் திறன்கள்
- கனிஷ்ட இரண்டாம்நிலை (ஆண்டு 6-9; வயது 10-14) – வாழ்க்கைக்கான அடித்தளம்
- சிரேஷ்ட இரண்டாம்நிலை I (ஆண்டு 10-11; வயது 14-16) – தொழிலுக்குத் தயாராவதற்கான அடித்தளம்
- சிரேஷ்ட இரண்டாம்நிலை II (ஆண்டு 12+; வயது 16-18) - கல்வி, தொழில்சார் மற்றும் உயர் தொழில்சார் வாழ்க்கைக்கான அடித்தளம்.

குறிப்பு: சிரேஷ்ட இரண்டாம்நிலை I மற்றும் சிரேஷ்ட இரண்டாம்நிலை II நிலைகள் முறையே க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தரம் என்று பரீட்சயமானவயேயாகும்.

6.15 முன்பள்ளி கல்வியானது, பாடசாலையில் கல்வியின் ஆரம்ப படிநிலை பொருட்டு தயாராக இருப்பதற்கு மாணவர்களை வசதிப்படுத்துதல் வேண்டும்.

6.16 அனைத்து மாணவர்களும் **18** வயதளவில் மேல்நிலைக் கல்வியை உரிய காலத்தில் நிறைவு செய்து மூன்றாம் நிலைக் கல்வி அல்லது பயிற்சியில் சேர வாய்ப்பினைக்கொண்டிருத்தல்.

அதனை உறுதிப்படுத்துவதற்கு:

- **11 ஆம் மற்றும் 12+ ஆம் தரங்களில் பாடசாலை நிறைவுச் சான்றிதழ்களைக் கட்டாயமாக்குதல்** : **11** ஆம் ஆண்டினை அல்லது **12+** ஆம் ஆண்டினை நிறைவுசெய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் அந்த ஆண்டுகளில் பாடசாலையில் அவர்களின் கற்றலின் முழு அளவையும் உள்ளடக்கி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படுதல்.

- **"ஆண்டு 11 இலிருந்து 12+ " அல்லது "12+ இலிருந்து மூன்றாம் நிலைக் கல்விக்கு" மாறுவதில் காலதாமதம் இல்லாதிருத்தல்** : தேசிய பரீட்சைகளின் (சா/த மற்றும் உ/த) பெறுபேறுகளுக்காகக் காத்திருக்காது அனைத்து மாணவர்களும் தமது நிறைவுச் சான்றிதழின் அடிப்படையில் வகுப்பேற்றம் செய்தல்.

- **குறைந்தபட்ச தேர்ச்சியைக் கட்டாயமாக்குதல்:** நிறைவுச் சான்றிதழைப் பெறுவதற்கு எழுத்தறிவு, கணிதறிவு மற்றும் டிஜிட்டல் அறிவு ஆகியவற்றில் குறைந்தபட்ச தேர்ச்சி மற்றும் பாடசாலை அடிப்படையிலான பாடவிதானம், இணைப் பாடவிதானம் மற்றும் பாடவிதானம் சாராத செயற்பாடுகளை நிறைவுசெய்வதனைக் கட்டாயமாக்குதல்.

- அனைத்து மாணவர்களும் தேசியப் பரீட்சைகளின் (சா.த. மற்றும் உ.த) பெறுபேறுகளுக்காகக் காத்திருக்காது அவர்களின் நிறைவுச் சான்றிதழ்களின் அடிப்படையில் வகுப்பேற்றம் செய்யப்படுதல்..

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரம் அல்லது தேசிய தொழில் தகைமைளை (NVQ) மாணவர்களின் மேலதிக கல்வி மற்றும் பயிற்சி அபிலாஷைகளுக்கு ஏற்ப பெற்றுக்கொள்ள முடிதல்.

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை, க.பொ.த உயர் தரத்தில் பிரிவுகளை / துறைகளை மாற்றுவதற்கு அனுமதிப்பதற்கு பாடசாலை சபைகள் பயன்படுத்தலாம் அல்லது ஏனைய பாடசாலைச் சபை நியாயாதிக்கத்திலிருந்து மாணவர்களை அனுமதிப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம்.

- **தேசிய பரீட்சைகள்/மதிப்பீடுகளுக்கான சட்டரீதியாக கட்டாயப்படுத்தப்பட்ட கால வரையறை;** க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்களை வழங்கும் தேசிய அதிகாரசபைகள் அல்லது பாடசாலை நிறைவுச் சான்றிதழ்களை வழங்கும் பாடசாலைச் சபைகள் பரீட்சைகள்/ மதிப்பீடுகளை நடத்தி குறித்த திகதிகளில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு சட்டரீதியாக கட்டாயப்படுத்துதல்.

- சிரேஷ்ட இரண்டாம்நிலை -II இற்குச் செல்கின்ற மாணவர்கள் கல்வி, தொழிற்கல்வி அல்லது கலப்புப் பிரிவுகளில் கல்வியைப் பெறுவதற்கான தெரிவினைக் கொண்டிருப்பதுடன், 18வயதில் பாடசாலை நிறைவுச் சான்றிதழைப் பெறுதல் .

6.17 சிரேஷ்ட இரண்டாம்நிலை –I இற்குப் பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற மாணவர்கள் சிரேஷ்ட இரண்டாம்நிலை -II நிறைவுச் சான்றிதழுக்கு இணையான உயர்கல்வி மற்றும் பயிற்சியில் மீண்டும் சேர்வதற்கு வாய்ப்பினைக் கொண்டிருத்தல். க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரம் போன்ற இறுதி, சுருக்கப் பரீட்சைகளில் சுமையைக் குறைத்து, அவற்றைத் தெரிவுப் பாடமாக்குதல். நிறைவுச் சான்றிதழ்கள் மூலம் பெறப்பட வேண்டிய திட்டங்கள், ஒப்படைகள் மற்றும் இணைப் பாடவிதானம் அல்லது பாடவிதானம் சாராத செயற்பாடுகளின் விடயதானங்களின் ஆக்கபூர்வமான மதிப்பீட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுதல்.

6.18 மேலும் முழுமையான மற்றும் சிறந்த வட்டவடிவமான கல்வியை உறுதி செய்வதற்காக, தொழில்முறை அல்லது தொழில் பாதைகளில் முன்னேறுவதற்கான பல பாதைகளை அனுமதித்து இடைநிலைக் கல்வியில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி மற்றும் / அல்லது திறன் பாதைகளில் பாடங்களின் செரக்கையைத் தேர்ந்தெடுப்பது கிடைக்கப்பெறுதல் (படம் 1).

6.19 எந்த நேரத்திலும் மீள உள்நுழைதல் மற்றும் இடம் மாறுதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளை தேசிய உயர் கல்வி ஆணைக்குழு மற்றும் / அல்லது தேசிய திறன்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தி, தற்போதிருக்கின்ற திறன்களை அதிகரிப்பதற்கும் மற்றும் புதிய திறன்களைப் பெறுவதற்குமான பயிற்றுவித்தலுக்குரிய வழிவகையை மேற்கொள்ளுதல் வேண்டும். (படம் 1)

6.20 மதிப்பீடுகளானவை, கல்விப் பாதையைப் பின்பற்ற விரும்பும் சிறிய சதவீதத்தினர் மட்டுமல்லாது, கற்போர் அனைவரினதும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக் கப்படுதல் வேண்டும்.

6.21 மாணவர்கள் அவர்களது பாடசாலைக் கல்வியின் முக்கிய கட்டங்களில், மாணவர்களின் ஆர்வங்கள், திறன்கள் மற்றும் இயலுமைகளின் அடிப்படையில், திறன் விருத்திக்கான தெரிவுகள் உள்ளடங்கலான மதிப்பீடுகள், உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு பயிற்சி மற்றும் தகுதிகளுடன் கூடிய வழிகாட்டுதல் ஆலோசகர்களுடன் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் பாதைகள் தொடர்பான தொழில் வழிகாட்டல் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6.22 தேசிய மதிப்பீடுகள், பொருத்தமான சருவதேச அளவுகோல்களுக்கு ஏற்ப தரப்படுத்தப்படுதல் வேண்டும்.


6.23 கல்வித் துறையிலுள்ள எந்தவொரு மாணவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே உயர்கல்வி வரை சீராக முன்னேறுவதற்கு ஏதுவாக சருவதேச மற்றும் உள்நாட்டு தகுதிகளுக்கு இடையேயான பரிமாற்றம் விரைவுபடுத்தப்படும்.

6.24 கல்வி நிலையங்களில் தக்கவைத்தல், நிறைவு செய்தல் மற்றும் நிறைவு செய்ய வேண்டிய நேரம் ஆகியவற்றின் விகிதங்கள் சருவதேச தரத்துடன் ஒப்பிடத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

6.25 விசேட தேவைகள் மற்றும் விசேட சூழ்நிலைகளிலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறைகள் இலகுவாக்கப்பட்டு ஆதரிக்கப்படுதல் வேண்டும்.

6.26 அதிக புள்ளிகள் பெறும் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விரைவான கற்றல் செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, வசதி ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

## தேர்ச்சிபெறாத சனத்தொகையை குறைப்பதற்கும், சகலருக்கும் தடையற்ற கல்வி வாய்ப்பினை வழங்குவதற்குமான புதிய முன்னேற்ற வழி (படம் 1)




(1) வரையறுக்கப்படுவதற்கு சமமான க.பொ.த உயர்தரம் ஊடாக எந்தவொரு கட்டத்திலும் ISCED 3 மட்டத்திற்கு மீள்பிரவேசம்.
(2) தேவைக்கேற்ப மேல் நிலை நற்சான்றிதழ்களுடன் எந்தவொரு பாதையிலும் நுழைவது சாத்தியமாகும்.
(3) கலப்புத் துறைகள், உயர் கல்வித் திட்டங்களுக்கான அல்லது ஏனைய திறன் தகுதிகளுக்கான அடித்தளத்தை உள்ளடக்கப்படலாம்.
(4) 1-13 பாடசாலை ஆண்டு காலத்தின் தொடக்கம் எதிர்கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப சரி செய்யப்படலாம்.

**சுருக்கம்:** மு.நே. முழு நேரம் NVQ-தேசிய தொழில் தகைமை ப.நே: பகுதி நேரம்

## ஆசிரியர் / அறிவூட்டுபவர் அபிவிருத்தி

6.27 ஆரம்ப பிள்ளைப்பருவ, ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலை கல்வி ஆகியவற்றில் கற்பித்தல் தொழிலானது, பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் தெரிவு தொழிலொன்றிற்கு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்;

- தேசிய ஆசிரியர் சான்றளிப்பு முறைமை (NTCS).
- பெருமைமிகு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை அங்கீகரித்து வெகுமதி வழங்குவதற்கான செயன்முறை
- பின்தங்கிய அல்லது வறிய மக்களுக்கு சேவையாற்றுபவர்கள் பொருட்டு கவர்ச்சிகரமான சேவைத் தரமதிப்பு.
- ஆசிரியர்களின் ஊதியத்தை மதிப்பிடுதல் மற்றும் மறுசீராக்கம்.
- தீர்மானமெடுத்தலில் ஆசிரியர்களையும் சேர்ப்பதற்கான பொறிமுறையொன்றாக தேசிய ஆசிரியர்கள் பேரவை (NCT).

6.28 அனைத்து கல்வி உப துறைகளிலுள்ள ஆசிரியர்களும், அறிவூட்டுபவர்களும்தொடர்ச்சியாக பயிற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக அவர்களது இயலளவு கட்டியெழுப்படுதலும் வேண்டும்:

- விசேட தேவையுள்ளவர்கள் பொருட்டு கற்பித்தலுக்கும் வசதியளிபதற்குமான உள்ளடங்கு அணுகுமுறைகளை பயன்படுத்துதல்.
- பாதுகாப்பான, சாத்தியமான சூழல் ஊடாக சமூக மற்றும் உணர்வுசார் அபிவிருத்தியை மேம்படுத்துதல்.
- நிலைபேறான அபிவிருத்தி, காலநிலை மாற்றம், ஏனைய இயைபான தேசிய, உலகளாவிய முன்னுரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை அவர்களது கற்பித்தலில் ஒன்றிணைத்தல்.
- மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தும், மாணவர் ஈடுபாட்டினை விருத்திசெய்யும் நோக்கில் பல்வேறுபட்ட கருவிகள் மற்றும் மேடைகளை பயன்படுத்துவதன்மூலம் அத்துடன் வேறு புத்தாக்க கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதன்மூலம் தொழினுட்பத்தை கல்வியில் ஒன்றிணைத்தல்.
- செயற்கை நுண்ணறிவு, தனியாள் உரிம,, பாதுகாப்பு, நியாயம், பொறுப்புகூறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மை வெளிப்படைத்தன்மை போன்ற அத்தகைய தரவுகளைப் பயன்படுத்தலுள்ள பிரச்சினைபோன்ற அத்தகைய தரவுப் பயன்பாடு மற்றும் தொழினுட்ப கருவிகளின் ஒழுக்கநெறி பயன்பாடு பற்றிய வழிகாட்டு நெறிகளையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல்.

## கூட்டாண்மைகள்

6.29 இத்துறையுடனான கூட்டாண்மைகள், அரச ஒத்துழைப்பினை குறைநிரப்புவதற்காக அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு பொருட்டு ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். கூட்டாண்மைகள் பொருட்டான விடயப்பரப்புக்களில் சில பின்வருமாறு;

1) பின்வருவனவற்றை அபிவிருத்தி செய்கையில் கூட்டிணைப்பதன் மூலம் தேசிய, உலகளாவிய முக்கியத்துவத்தில் வளர்ந்துவரும் விடயப்பரப்புக்களில் **கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி;**

அ. நிலைபேறான மற்றும் காலநிலை நேயமிக்க முயற்சியாண்மை பொருட்டான புதிய பாடவிதானங்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள்; தன்னார்வத்திற்கான பொறிமுறைகள்; அத்துடன் கற்பித்தலுக்கான புதிய பொருட்கள்.

ஆ. தேர்ச்சி நியமம், பாடவிதானங்கள் மற்றும் திறன்களில் தகைமையுள்ள ஆசிரியர்கள்.

இ. இரண்டாம்நிலைக் கல்வி, உயர் கல்வியில் உள்ளகப்பயிற்சிகள் மற்றும் பயிலுநர் நிலைகள் அத்துடன் திறன் அபிவிருத்தி, உண்மையான உலக நடைமுறைகளில் மாணவர்களுடன் கைகோர்த்த அனுபவத்தை அளித்தல்.

ஈ. தேவையான வளங்களை, தொழிற்றுறை / வர்த்தக நடமுறைகள் மற்றும் விரிவுரையாளர்களாக தொழிற்றுறையாளர்களைப் பெறுவதற்கான கம்பனிகள், நிலையங்கள் மற்றும் மையங்கள் அடங்கலாக பொருத்தமான மாதிரியுருகள் மற்றும் அமைப்புகள்.

2) தனிப்பட்ட மற்றும் உள்ளடங்கல் கற்றலுக்கான கற்பித்தல், கற்றல் கருவிகளாக ஏனைய தொழினுட்பங்களிடையே செயற்கை நுண்ணறிவினை கூட்டிணைப்பதன் மூலம் கல்வியில் டிஜிட்டல் மாற்றம்; மெய்நிகர் கற்றல் மற்றும் மெய்நிகர் பல்கலைக்கழகங்கள் பொருட்டு வசதிகளை அபிவிருத்திசெய்தல்; அத்துடன் மாறும் கற்றல் தேவைகளுக்கான ஏனைய தழுவல்கள்.

3) தேசிய, உலகளாவிய முன்னுரிமைகளின் தலைப்புக்கள் பற்றி உலகளாவிய வெளிப்படுத்தல் மற்றும் கூட்டிணைப்பினை பேணிவளர்ப்பதற்கும், மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிப்பதற்கும் அத்துடன் குறுக்கு வளமாக்கல் பொருட்டு கட்டணம் செலுத்தும் வெளிநாட்டு மாணவர்களை கவர்வதற்குமான **சருவதேச இணைப்புக்கள்.**

# 7. கொள்கைக் கூற்றுக்கள் | ஆளுகை

7.1 **கல்வி அமைச்சர்** கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், அவற்றின் அமுலாக்கத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், மாகாண திட்டங்கள் தேசிய கொள்கையுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு மாகாண அதிகாரிகளுடன் ஒருங்கிணைதல், ஆசிரியர் மற்றும் பிற தொடர்புடைய கல்வி சேவைகளைத் தரப்படுத்துதல் மற்றும் ஒழுங்கு படுத்துதல், மாணவர் நலன் மற்றும் பாதுகாப்பை எளிதாக்குதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாக விளங்குவார்.

கல்வி அமைச்சர், முக்கிய ஒழுங்குபடுத்தல் அல்லது நிருவாக நிறுவனங்களால் அடைவதற்கான வழி, தரம் மற்றும் பொருத்தமாந்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய கல்வி பெறுபேறுகள் குறித்து கல்வி உப துறை, பிரதான ஒழுங்குபடுத்தல் அல்லது நிருவாக நிறுவனங்கள் மூலம் வருடாந்தம் பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிக்கையிடுதல் வேண்டும்.

7.2 **கல்வி அமைச்சர் பின்வரும் நிறுவனங்களால் ஆலோசனை வழங்கப்படுவார் ;**

- ஆரம்ப பிள்ளைப் பருவம், ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் நிபுணத்துவமும் அனுபவமும் கொண்ட புகழ்பெற்ற கல்வியாளர்களைக் கொண்ட **கல்விக்கான தேசிய ஆலோசனைக் குழு** (NEC), அமைச்சரவையால் நியமிக்கப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கி, வழிகாட்டும். இந்த ஆலோசனைக் குழு தற்போதைய தேசிய கல்வி ஆணைக்குழுவினைப் பதிலீடு செய்யும்.

- அனைத்து கல்வி மற்றும் நிருவாக உப துறைகளிலும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மூலோபாயமொன்றை விருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதற்கும் தொழிற்றுறை நிபுணர்களைக் கொண்ட **கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான நிபுணர் குழுவொன்று** தாபிக்கப்படுதல் வேண்டும்.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட மாகாண பிரதிநிதியை/களைக் கொண்டிருக்கின்ற **மாகாணக் கல்வி அதிகார சபைகள் பணிப்பாளர்**, அவர்களது பிரதேசங்களில் கல்வி முன்முயற்சிகள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடவும், செயற்படுத்தவும், மதிப்பீடு செய்யவும் கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

7.3 **கல்வி அமைச்சு,** வினைத்திறன்மிக்க மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டிற்காக பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கும்;

- கொள்கை ஆய்வு மற்றும் வகுத்தமைப்பு
- கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதல்
- தர உறுதிப்பாடு மற்றும் கட்டுப்பாட்டினை பரிசோதனை
- மகாண அலுவல்களை ஒருங்கிணைத்தல்

- டிஜிட்டல் மாற்றம் மற்றும் தரவு முகாமைத்துவம்

7.4 **மாகாண கல்வி சபைகள்,** கல்விக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வெவ்வேறு மாகாணங்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, ஒன்பது மாகாணங்களிலும் தேசிய தரங்களுக்குள் தன்னியக்கத்துடன் தாபிக்கப்படுதல் வேண்டும். மாகாணக் கல்விச் சபைகள் தேசிய தரநியமங்களுக்கு அமைவாக புதிய கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் தாபிக்க முடியும்.

7.5 **கல்வி அபிவிருத்திச் சபைகள்,** கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும் வினைத்திறன் மிக்க கல்வி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கும் மாகாணக் கல்விச் சபைகளுக்குக் கீழே பொருத்தமான மட்டத்தில்/ மட்டங்களில் அறிவுசார்ரீதியான பாடசாலை திட்டவடிவமைப்பு பயிற்சியின் மூலம் தாபிக்கப்படுதல் வேண்டும். புவியியல் அருகாமையைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பாடசாலை தொகுதியின் நியாயாதிக்க உருவாக்குவதற்கு அறிவியல்ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட **பாடசாலைகளின் தொகுப்புகளை** ஒவ்வொரு கல்வி அபிவிருத்திச் சபையும் கொண்டிருக்கலாம்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகள் தாபிக்கப்படுவதுடன், நிருவாகப் பகுதியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய சபைகள் இருக்கலாம்.

கல்விச் சபைகளின் வகைகள், எண்ணிக்கை, நியாயாதிக்கம் மற்றும் எல்லைகள், அனைத்து பிள்ளைகளும் கல்வி முன்னேற்றத்திற்கான பொருத்தமான பாதைகளை அணுகுவதை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு சபையிலும் போதுமான எண்ணிக்கையிலான பாடசாலைகள் உள்ளன என்பதை மாகாண அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து கல்வி அமைச்சரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். (படம் 1).

ஒவ்வொரு தொகுதிக்கும் போதுமான எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் இருப்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் பொருத்தமான பதவியணி மற்றும் ஆசிரியர் இடமாற்றத்திற்கான ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

அத்தகைய சபைகளின் எல்லைகள் தற்போதுள்ள நிருவாக எல்லைகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

அனைத்துப் பாடசாலைகளும் மாகாண பாடசாலைகளாக இருத்தல் வேண்டும். தேசிய பாடசாலை இல்லதொழிக்கப்படும்.

7.6 **தேசிய கல்வி நிறுவனம் (NIE)**, ஆரம்ப பிள்ளைக்கல்வி, ஆரம்ப கல்வி மற்றும் இரண்டாம்நிலைக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற பொதுக் கல்வியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்ப, பாடத்திட்டங்களை, நியமங்களை விருத்தி செய்வதற்கும், தரமான ஆசிரியர் கல்வி மற்றும் ஆட்களின் தொழில்சார் விருத்தியை வழங்குவதற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், உரிய முகவர் நிறுவனங் களுக்கிடையேயான ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவந்து ஆரம்பகால பிள்ளைப் பருவக் கல்விக்கு பொறுப்பான பிரிவாக தேசிய கல்வி நிறுவகத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

7.7 **தேசிய திறன்கள் ஆணைக்குழு (NSC)**, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுற்குப் (TVEC) பதிலாக திறன் அபிவிருத்திக்கான மறுபெயரிடப்பட்ட ஆணையமாக மாறும். தேசிய திறன்கள் ஆணைக்குழு (NSC), தேசிய மற்றும் மாகாண மட்டங்கள் முழுவதிலுமுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் திறன்கள் துறையின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் அபிவிருத்தி; வருடாந்த தொழில் சந்தைத் திட்டமிடலை நடத்துதல்; பல்கலைக்கழக முறைமைக்கான இணைப்புகளுடன் கல்லூரிகளின் முறைமையொன்றாக தற்போதிருக்கின்ற அரச துறை பயிற்சி வழங்குநர்களை ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்; திறன் சபைகளை நிறுவுதல் மற்றும் அவை நிறுவப்பட்டவுடன் அவற்றுக்கு பணிகளை ஒப்படைத்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

7.8 **தேசிய உயர் கல்வி ஆணைக்குழு (NHEC)**, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பதிலீடு செய்யப்படுவதோடு, தேசிய கொள்கைகளைப் பின்பற்றி உயர் கல்வியை ஒருங்கிணைப்பதற்கும், அரச மற்றும் அரசு சாராத,தேசிய மற்றும் மாகாண உயர் கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனைத்து பட்டப்படிப்பு மற்றும் பட்டப் படிப்பிற்கு சமமான நற்சான்றிதழ்களிலும் கல்வித் தரத்தை பராமரிப்பதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

தேசிய உயர் கல்வி ஆணைக்குழு (NHEC), நிருவாக, நிதி மற்றும் கண்காணிப்பு செயற்பாடு களுக்கு அப்பால் நேர்மறையான கல்விச் சூழலை பேணிவளர்க்கும் பல்கலைக்கழகங்களின் கொள்கை வகுக்கும் அமைப்புகளாக **பல்கலைக்கழக மன்றங்களை** நிறுவுதல் வேண்டும்.


தேசிய உயர் கல்வி ஆணைக்குழு (NHEC) வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா செயன்முறைகளை நெறிப்படுத்துவதற்கும், பட்டப்படிப்பின் பின்னர் அவர்கள் இலங்கையில் தொழில் புரிவதற்கான பொறிமுறை யொன்றைத் தாபிப்பதற்கும் ஒருங்கிணைக்கும்.

புதிய பல்கலைக்கழகங்கள் மாகாண சபைகளின் கீழ் தாபிக்கப்படுதல் வேண்டும். தற்போதிருக்கின்ற பட்டம் வழங்கும் நிறுவனங்கள் புதிய சட்டத்தின் கீழ் **மாகாண பல்கலைக்கழகங்களாக** வருதல் வேண்டும்.

7.9 தேசிய அளவில் அரச மற்றும் அரசு சாரா கல்வி நிறுவனங்களில் ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி, மற்றும் இரண்டாம்நிலைக் கல்வி, உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கு **தர உத்தரவாதம் மற்றும் சான்றளித்தல் பொறிமுறைகள்** ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

7.10 **அனைத்து கல்வி வழங்குநர்களும்** தேசிய மற்றும் மாகாண அதிகாரிகள் மற்றும் நிருவாகம், நிதி, மனிதவள முகாமைத்துவம் மற்றும் மாணவர்களைத் தெரிவு செய்வதுடன் தொடர்புபடுகின்ற பாடசாலை சபைகளால் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குள் தன்னியக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## குறித்துக்காட்டும் ஆளுகைக் கட்டமைப்பு (படம் 2)



குறிப்பு **1:** தேசிய கல்வி ஆணைக்குழு சட்டம் **(1991** ஆம் ஆண்டின் **19** ஆம் இலக்க சட்டம்**)** வழக்கொழியச் செய்யப்பட்டு, பணிகள் மீள்வரையறை செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், கல்விக்கான தேசிய ஆலோசனைக் குழுவாக கல்வி அமைச்சுடன் கூட்டிணைக்கப்படுதலும் வேண்டும்.

குறிப்பு **2:** ஆரம்பகால பிள்ளைப் பருவக் கல்வியை ஒழுங்குபடுத்துவதிலும், மேற்பார்வை செய்வதிலும் வகிபாகத்தின் வரையறையின்மையைத் தீர்ப்பதற்காக ஆரம்பகால பிள்ளைப் பருவ மேம்பாட்டுக்கான தேசிய செயலகம், தேசிய கல்வி நிறுவகத்தின் ஒரு பகுதியாக இருத்தல்வேண்டும்.

## 8. கொள்கைக் கூற்றுக்கள் | முதலீடுகள் மற்றும் வளங்கல்

8.1 அனைத்துத் துறைகளிலும் அரச - தனியார் கூட்டாண் மைகள் உள்ளடங்கலாக அரச சார்பற்ற தரப்பினர்களின் பங்குபற்றுதல்.

8.2 ஆரம்ப பிள்ளைப்பருவ கல்விக்காக தற்போதிருக்கின்ற ஏற்பாடுகள், கூட்டாண்மைகள் ஊடாக உச்சப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், பொருளாதாரரீதியாக பின்தங்கிய குடும்பங்கள் அடையப்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆக்கப்படுதலும் வேண்டும்.

8.3 அரச பாடசாலைகளில் ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலைக் கல்விக்கான நிதியிடலானது, தற்போதுள்ள வசதிகளின் நிலை, பாடசாலையின் செயலாற்றுகை மற்றும் ஏனைய அளவுகோல்களுக்கு ஏற்ப ஒரு மாணவருக்கு ஒரு மாணவர் விகிதம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, நேரடியான நிதியிடலானது, போசாக்கு, டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் உள்ளடக்கம் கிடைக்கப் பெறுதல், இணைப்பு, அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக வழங்கப்படுதல் வேண்டும். தற்போதைய உள்ளீடு அடிப்படையிலான நிதியிலிருந்து மாறுவதற்கு மூன்று ஆண்டு கால அவகாசம் அனுமதிக்கப்படுதல் வேண்டும். பின்தங்கிய / பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகள் அல்லது சமூகங்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களுக்கு ஒரு மாணவருக்கு அதிகமான விகிதம் பிரயோகிக்கப்படுதல்வேண்டும்.

8.4 அரச நிறுவனங்களிலுள்ள அனைத்து மூன்றாம் நிலைக் கல்விக்கான நிதியீட்டமானது, அரசாங்க அளிப்புக்கள், மாணவர் பங்களிப்புக்கள் மற்றும் பிற வருமானங்கள். ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1) அரச மானியங்கள், தீர்மானிக்கப்பட வேண்டிய சூத்திரத்தின்படி ஆட்சேர்ப்பின் மற்றும் செயலாற்றுகையின் அடிப்படையிலானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த நிதிகள், தொழில்துறையின் விடயத்தின் தேவையில் ஆட்சேர்ப்பை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்புகள் மற்றும் தொழில் துறை திறன்கள் மன்றத்துனால் அங்கீகரிக்கப்பட்ட நிலைமாறுகால ஏற்பாடொன்றினை உள்ளடக்கலாம்.

2) மாணவர் பங்களிப்புகளில் அரச அளிப்பு, அரசு ஆதரவுக் கடன்கள் மற்றும் சொந்தமாக பங்களிப்புச் செய்தல் ஆகியவை உள்ளடங்கும். பணம் செலுத்துவதற்கான தகுதி மற்றும் ஆற்றலுக்கான அளவுகோல்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு மற்றும் தொடர்புடைய சூத்திரங்களின் விநியோகம் தீர்மானிக்கப்படுதல்.

3) ஆராய்ச்சி மற்றும் வர்த்தகமயமாக்கப்பட்ட திட்டங்களுக்காக கல்வி நிறுவனங்களால் பெறப்படும் ஏனைய வருமானம் பிரத்தியேக நிதியமொன்றினால் மேலதிக நிதியுடன் வழங்கப்படுதல் வேண்டும்.

விடய வரிசை வகை அடிப்படையிலான நிதியிடலிலிருந்து பதிவு அடிப்படையிலான நிதியிடலுக்கு மாறுவதற்கு மூன்று ஆண்டுகள் கால அவகாசம் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

8.5 அரசு சாரா நிறுவனங்களில் மூன்றாம் நிலைக் கல்விக்கான பொது நிதியளிப்பு, அரச அளிப்புகள் மற்றும் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு அரசு ஆதரவு கடன்கள் மற்றும் ஆராய்ச்சிக்கான வெகுமதிகள் ஆகிய இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கலாம்.

8.6 அரசு மற்றும் அரசு சாரா கல்வி நிறுவனங்களில் மாணவர் பங்களிப்பை பூர்த்தி செய்ய மாணவர்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு ஒவ்வொரு மாணவரின் தகுதி மற்றும் பணம் செலுத்தும் திறனின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அத்தகைய ஆதரவு அரசாங்க மானியங்கள் மற்றும் அரசாங்க ஆதரவு கடன்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

8.7 மூன்றாம் நிலைக் கல்விக்காக அரச நிதியுதவியுடன் கடன் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் திருப்பிச் செலுத்துவதற்கான விதிமுறைகள் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

8.8 அரச அளிப்புகளைப் பெறுகின்ற மாணவர்களின் சேவைக் கடப்பாடு, முதலீட்டிற்காக நாடு பெறுகின்ற மதிப்பை உறுதிப்படுத்துவதைத் தீர்மானித்தல்வேண்டும்.

8.9 பொது நிதிகளை பெறும் எல்லா நிறுவனங்களும், தேசிய முக்கியத்துவத்தின் பல்வகைமை மற்றும் பிற பிரமாணங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய கடப்பாடுகள், ஆணைகள் மற்றும்/அல்லது வெகுமதிகள் ஊடாக பயனுக்குவருதல் வேண்டும்.

8.10 உயர் தரமான நிறுவனங்களை கவருவதற்கான முதலீட்டு நுழைவாயிலுடன் உயர் கல்வியில் மற்றும் திறன்கள் விருத்தியில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உரிமைத்துவத்தை வரையறுப்பது அகற்றப்படுதல்.

8.11 வசதிகள் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன் படுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களைத் தாபிப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு கடனடிப்டையில் ஊக்குவிப்புத் திட்டங்கள்.

8.12 (அ) ஆராய்ச்சி கலாசாரத்தை வளர்த்தல் (ஆ) கற்பித்தலில் புத்தாக்கம் (இ) கல்வியின் டிஜிட்டல் மாற்றம் (ஈ) துறையுடன் கூட்டாண்மை, அத்துடன் (உ) சருவதேச தொடர்பு என்பவை தொடர்பில் போட்டிரீதியான அளிப்புக்கள் மற்றும்/அல்லது கல்வி

நிறுவனங்களுக்கான ஊக்குவிப்புக்களை உருவாக்கும் பொறிமுறை தாபிக்கப்படுதல் வேண்டும்.

8.13 அனைவரையும் உள்ளடக்கிய கற்றல் மற்றும் விரைவான கற்றலுக்கான கூட்டாண்மைகள் ஊடாக வளங்கள் எளிதாக்கப்படுதல் மற்றும் திரட்டப்படுதல் வேண்டும்.

-முற்றும்-

**பின்னிணைப்பு 1**

# முக்கியமான சவால்கள்

## ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வி

1. முகவரகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாமை: ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்விக்கான பொறுப்பு, கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் (NSECD) மற்றும் மாகாண அதிகாரசபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில், இந்த நிறுவனங்களை ஒன்றுசேர்ப்பதற்காக கல்வி அமைச்சில் தேசிய முகாமைத்துவ மற்றும் ஒழுங்குபடுத்துதல் குழு (NMRC) தாபிக்கப்பட்டிருந்தது, ஆனால் இன்றுவரை ஒருங்கிணைப்பு காணப்படவில்லை.

2. சட்ட அமுலாக்கத்திற்கான வசதியின்மை: தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் இல்லாததால் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தினால் (NSECD) நிர்ணயிக்கப்பட்ட நியமங்களை செயற்படுத்த முடியவில்லை.

3. ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வியின் முழுமையான தன்மையில் போதுமான கவனம் இல்லை: யுனிசெப்பின் கூற்றுப்படி, பாடசாலை மற்றும் சமூகத்தில் அல்லாது முன் ஆரம்ப கல்வியில் பங்கேற்பதற்குத் தேவையான ஆரம்பகால அறிவாற்றல், பௌதீக மற்றும் சமூக-உணர்விசார் திறன்களில் ஈ.சி.இ கவனம் செலுத்துதல் வேண்டும். தற்போது வாசிப்பு, எழுத்து மற்றும் கணித திறன்களை அடைவதில் தவறான வழிகாட்டல் காணப்படுகின்றது.

4. செயற்பாட்டாளர்களின் பன்முகத்தன்மை காரணமாக தரத்தில் மாறுபாடு: இலங்கையில் ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வியின் சேவைகளை வழங்குவது பெரும்பாலும் அரசு சாரா

வளங்களை சார்ந்துள்ளது, 19,000 இற்கும் மேற்பட்ட ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வி நிலையங்களில் பெரும்பாலானவை அரசு சாரா நிறுவனங்களாக நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்கள் மாகாண அதிகாரசபைகளால் பின்தொடர்தல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுதல் சீராக இல்லை என்பதுடன், ஆரம்ப பிள்ளைப் பருவ ஆசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான நட்டஈடு போதுமானதாக இல்லை என்பதுடன், நிலையங்களுக் கிடையில் அதிகளவு மாறுபடும் காணப்படுகின்றது.

5. அடைவதற்கான வழி மற்றும் ஆட்சேர்ப்பில் சமத்துவமின்மை: ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வியின் சேவைகளை அணுகுவதில் கணிசமான வேறுபாடுகள் உள்ளன, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள வறிய மக்களுக்கு ஈ.சி.இ.யின் நன்மைகள் மறுக்கப்படுகின்றன.

6. விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் போதுமானளவு கவனத்தைப் பெறுவதில்லை என்பதுடன், பிரத்தியேகமான மற்றும் புதுமையான அணுகுமுறைகளுக்கான வழிகள் காணப்படவில்லை.

## ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலைக் கல்வி

1. கல்வித் துறையில் முக்கிய செயற்பாட்டாளர்களும், நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயற்படாது தனித்துசெயற்படுகின்றன.

2. தீர்மானமெடுத்தல் என்பது கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையுடனான நெருக்கமான ஈடுபாடு மற்றும் புத்துருவாக்கம் ஆகியவற்றை உச்ச அளவில் கட்டுப்படுத்துகின்றது.

3. தேசிய பரீட்சைகள், பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையில் செலவழித்த பல ஆண்டு காலத்திற்கு காட்டுவதற்கு எதுவுமின்றி பாடசாலை முறைமையை விட்டு வெளியேறுகின்ற, கல்விப் பயணத்திற்கு சிறிய சதவீத மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன.

4. பரீட்சை அடிப்படையிலான கற்பித்தல் கற்றல் செயல்முறை படைப்பாற்றலை அல்லது புத்துருவாக்கத்தைத் தடுக்கின்றது.

5. கடுமையான கல்வி நடைமுறைகள் மற்றும் முழுமையான கல்வி அல்லது கடுமையான கல்வி நடைமுறைகளை இலகுவாக்குவதற்கான வழிகள் வரையறுக்கப்பட்டுள்ளதன் காரணமாக விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான கல்வியில் வரையறைகள் காணப்படுகின்றன.

6. உயர்கல்வித் துறையின் கோரிக்கைகளுக்கு பதிலிறுக்கும் வகையில் அரசுகள் முன்னுரிமை அளித்ததால், பொதுக் கல்வியில் பொது முதலீடுகளின் பங்கு குறைவடைந்து வருகின்றது. (அரச துறை செலவின அறிக்கையைப் பார்க்கவும்)

7. முக்கிய கல்வித் துறைகளில் குறுக்கு இணைப்புகளுடான பல முன்னேற்ற பாதைகள் இன்மை.

8. பாடசாலைகளை தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளாக வகைப்படுத்துதலானது, வசதிகள் மற்றும் வளங்கள் வேறுபடுவதன் காரணமாக பாரிய ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியுள்ளது.

9. இனம், மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாடசாலைகளைத் திறப்பதும் பெயரிடுவதும் சமூகத்தில் இன, மொழி மற்றும் மத ஐக்கியமின்மைக்கு பங்களித்துள்ளது அல்லது குறைந்தபட்சம் தேசிய ஒற்றுமைக்கு தடையாக வளங்குகின்றது.

10. பாடசாலைகளில் வழங்கப்பட்டுள்ள உயர்தரப் பாடப்பிரிவின் வகைகளை ஒழுங்கற்ற முறையில் பகிர்ந்தளித்தல்.

11. பாடசாலையிலிருந்து தொழிற்கல்விக்கு மாறுவதற்கான முறைமைசார் முறைமையொன்று இன்மையானது, மாணவர்கள் கல்வி மற்றும் பயிற்சியிலிருந்து விலகி தொழிலில் இணைவதற்கு இட்டுச்செல்கின்றது.

12. இலங்கை பூராவும் நிலவியிருந்த டிஜிட்டல் பிளவு மற்றும் டிஜிட்டல் சமத்துவமின்மை கோவிட் -19 காலப்பகுதியின்போது கற்றல் இழப்பாக கோடிடப்பட்டுள்ளது.

13. செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் கல்வியறிவு, தரவு அறிவியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நெறிமுறை அவதானிப்புகள் போன்ற எண்ணக்கருக்களை ஒருங்கிணைக்கின்ற எதிர்காலத்தை மையப்படுத்திய பாடத்திட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்பாடு.

14. நகரப் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற கருவிகள் மற்றும் அடித்தளங்களுக்கான வழி, ஏனைய பகுதிகளில் கிடைக்கப்பெறாமை, இந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் போட்டித்தன்மையை கணிசமாகக் குறைக்கின்றது.

15. மாணவர்களின் திறனை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவதற்கான தொழில் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் காணப்படாமை.

16. மென்திறன் விருத்தியின்மை.

17. நிலையான அபிவிருத்தி மற்றும் காலப்போக்கிற்கு ஏற்ற செயல் தொடர்பில் உலகளாவிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் கல்வியைத் தடுக்கின்ற சுற்றுச்சூழல் காரணிகளுடன் தொடர்புடைய புத்துருவாக்கங்களுக்கான இடமின்மை.

18. பொதுக் கல்வியில் காலநிலை மற்றும் அனர்த்த இடர் போன்ற அபாயங்களை ஒருங்கிணைக்காமை மற்றும் தீர்வு சார்ந்த அணுகுமுறைகள், தனிப்பட்ட நடைமுறைக் கற்றல் செயன்முறைகள் மூலம் உருவாக்கப்படுகின்றன.

19. ஆசிரியர் தொழில் மிகவும் அர்ப்பணிப்புள்ள அல்லது அறிவார்ந்த வளஆளர்களை ஈர்ப்பதில்லை என்பதுடன், இந்த முறைமையில் சிறந்த ஆசிரியர்கள் போதியளவிலான அங்கீகாரத்தைப் பெறுவதில்லை.

## மேலதிக கல்வி

## (தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது)

1. பாடசாலைப் படிப்பை விட்டு வெளியேறுபவர்களுக்கு தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வித் (TVET) துறையில் ஈடுபாடின்மை மற்றும் தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வித் (TVET) துறையில் சேர்க்கப்பட்ட மாணவர்களால் பட்டப்படிப்பு அந்தஸ்துக்கான அதிகரித்த தேவை.

2. காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்கு முன்னோக்கி சிந்திக்கின்ற மற்றும் தீர்வு காண்கின்ற, வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது தொடர்பிலான வரையறைகள்.

3. தர நியமங்கள் மற்றும் கட்டுப்பாடுகளில் முரண்பாடு. கல்வி மற்றும் திறன்கள் விருத்தி, பொருளாதார தேவை அல்லது தொழில்துறை தேவைகளுடன் இணைக்கவில்லை.

4. பொது முதலீடு முற்றிலும் வழங்கல் சார்ந்தது மற்றும் உள்ளீடு அடிப்படையிலானது என்பதுடன் முதலீடுகள் மீதான வருமானம் மீது அதிக தாக்கம் / விளைவுகளைக் கொண்ட விடயப்பரப்புகளுக்கு பயன்படுத்தப்படாமை, கண்காணிக்கப்படவில்லை அல்லது அளவிடப்படவில்லை.

5. உலகளாவிய அதாவது, குடியியல் கல்வியறிவு; காலநிலை நெருக்கடி; நிதி கல்வியறிவு; தொழில் முயற்சிசார் திறன்கள் போன்ற அபாயங்களைக் கருத்தில் கொண்டு, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலத் தேவைகளில் முக்கிய தாக்கங்களைக் கருத்தில் கொள்வதில் வரையறைகள்.